பார்த்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். ''அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம், எவர் சொன்ன சொல்லானாலும் அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவினால் எண்ணிப்பார்ப்பாய்'' என்று கூறிய தந்தை பெரியார் வழியில், சுயமரியாதை இயக்கத்தில் வந்த நாங்கள் நிச்சயமாக இதையும் எண்ணிப் பார்த்துச் செயல்படுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகளை எழுப்ப அ மதி வ ழங்கும் முறை.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர். நான் நடைமுறை பற்றி ஒருதீர்ப்பைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். நாங்கள் பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுக்கிறோம். மற்ற விஷயங்களை நாங்கள் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரு கிறோம். ஆனால், மென்ஷன் என்ற பெயரில் அவைகளை நீங்கள் முடித்துவிடுகிறீர்கள். டி.வி.எஸ். நிறுவனம் தொடர்பான உண்ணாவிரதம் பற்றிக் கூட நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். ஆனால், அதை மென்ஷன் என்ற முறை யில் முடித்துவிட்டீர்கள். அதேபோன்று இராமமூர்த்தி கமிஷன் தீர்ப்பு பற்றி விவாதிக்கவேண்டும் என்று நான் சொல்லியிருக் கிறேன். அதையும் மென்ஷனில் முடித்து விட்டீர்கள். நடை முறையில் இதுபோன்றுதான் நடைமுறைப்படுத்தப்படுமா என் பதை நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எனக்கு மிகவும் உதவி தருகின்ற வினா; இனிமேல் முறைப்படி அறிவிப்புக் கொடுக்காமல் அனைத்து உறுப்பினர்களுக்கும் எந்த வகையான வாய்ப்பும் வழங்கப்பட மாட்டாது என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து, பேரவைக்கு மனு அளித்தல். திரு. கோ. வீரையன்.

5. பேரவைக்கு மனு அளித்தல்.

சுருட்டுத் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்து.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள சுருட்டுத் தொழிலாளர் களின் கோரிக்கைகள் குறித்த மனு ஒன்றைத் தங்கள் மூலமாக நான் பேரவைக்கு அளிக்கிறேன்.